**2025.09.22 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01. இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கும் இடையிலான கல்வி ஒத்துழைப்புக்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்**

இலங்கைப் பல்கலைக்கழகங்களை உலக தரப்படுத்தல் அளவுகோல்களுக்கு உயர்த்துதல் மற்றும் சர்வதேசமயப்படுத்துவதற்காக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் உயர்கல்வி ஒத்துழைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கில் எமது நாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு இடையில் கீழ்க்காணும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- களனிப் பல்கலைக்கழகம் மற்றும் பெலாரூஸ் குடியரசின் Polcssky State University இற்கும் இடையில் 05 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் புரிந்துணர்வு ஒப்பந்தம்
- களனிப் பல்கலைக்கழகம் மற்றும் ரஸ்யாவின் Vladimir State University இற்கும் இடையில் 03 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் புரிந்துணர்வு ஒப்பந்தம்
- ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞானபீடத்தின் பன்ம அறிவியல் துறை (Department of Polymer Science) மற்றும் தாய்லாந்து அரசின் Petroleum and Petrochemical College, Chualongkorn University இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

**02. இலங்கைக்கும் துருக்கி குடியரசுக்கும் இடையிலான விவசாய ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

விவசாய துறையில் முன்னேற்றகரமான தொழிநுட்ப முறைகளைப் பயன்படுத்துகின்ற துருக்கி குடியரசுடன் பரஸ்பர ஒத்துழைப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் இலங்கையின் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதன் அனுகூலங்களைக் கருத்தில் கொண்டு, இலங்கை மற்றும் துருக்கிக் குடியரசுக்கும் இடையில் விவசாய ஒத்துழைப்புக்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக 2021.02.15 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இதுவரை கையொப்பமிடவில்லை. அதனால், குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக சமகால அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. இலங்கை மற்றும் பிலிப்பைன் குடியரசுக்கும் இடையில் குற்றச் செயல்களின் போதான பரஸ்பர சட்டரீதியான ஒத்துழைப்புக்கள் தொடர்பான ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்**

ஒரு அரசால் மற்றய அரசுக்கு நீதிமன்ற ஆவணங்களை வழங்கல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் போது பயன்படுத்தக்கூடிய சாட்சியங்களை திரட்டுதல் போன்றவற்றின் மூலம் ஒத்துழைப்பு வழங்குதல் அல்லது ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறை, குற்றச் செயல்களின் போது பரஸ்பர சட்டரீதியான ஒத்துழைப்புக்கள் எனப்படும். பரஸ்பர ஒத்துழைப்புக்களுக்காக முறைசார்ந்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதன் மூலம் பலம்பொருந்திய ஒத்துழைப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கும், குற்றச் செயல்களைத் தடுத்தல், விசாரணை நடவடிக்கைகள், வழக்குத் தொடர்தல் மற்றும் குற்றத்தடுப்புக்களை



163, කිරුළපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු தொ T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

வினைத்திறனாக மேற்கொள்வதற்கு இயலுமை கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, இலங்கை மற்றும் பிலிப்பைன் இற்குமிடையில் குற்றச் செயல்களின் போது பரஸ்பர சட்டரீதியான ஒத்துழைப்புக்கள் தொடர்பான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 04. குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட நபர்களை ஒப்படைத்தல் பற்றிய இலங்கை மற்றும் பிலிப்பைன் குடியரசுக்கும் இடையிலான ஒப்பந்தம்

இலங்கை நீதிமன்றமொன்றில் வேறு நாடொன்றின் பிரஜைக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு மறியல் தண்டனை விதிக்கப்படும் போது, குறித்த நபர் பிரஜாவுரிமையைக் கொண்டிருக்கும் நாட்டில் தண்டனையை அனுபவிப்பதற்கு இயலுமாகும் வகையிலான ஏற்பாடுகள் 1995 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க குற்றவாளிகளை ஒப்படைக்கும் சட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளது. அத்துடன், ஏதேனுமொரு நாட்டில் சிறைத்தண்டனைக்கு ஆளாகிய இலங்கைப் பிரஜையின் எஞ்சிய மறியல் தண்டனைக் காலத்தை அனுபவிப்பதற்கு மீண்டும் இலங்கைக்கு அழைப்பதற்கான ஏற்பாடுகளும், குறித்த சட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கைக்கும், பிலிப்பைன் குடியரசுக்கும் இடையில் குற்றவாளிகளை ஒப்படைத்தல் தொடர்பான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் மூலம் சிறைக்கைதிகளுக்கு சமூகமயமான புனர்வாழ்வு மற்றும் தமது சமூகத்துடன் மீளிணைவதற்கு தமது தாய் நாட்டுக்கு வருகை தருவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும். அதற்கமைய, உத்தேச ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும், பின்னர் குறித்த ஒப்பந்த்தை ஏற்று அங்கீகரிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 05. இலங்கையின் முதியோருக்கான தேசிய கொள்கை

இலங்கையின் சிரேஷ்ட பிரஜைகள் தொடர்பான தேசிய சமவாயம் மற்றும் தேசிய கொள்கைக்காக 2006 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. மாறிவரும் போக்குகளுக்கமைய, இலங்கையின் சிரேஷ்ட பிரஜைகள் தொடர்பான தேசிய சமவாயம் காலத்தோடு தழுவியதாக இற்றைப்படுத்தப்பட வேண்டுமென அடையாளங் காணப்பட்டுள்ளது. அத்துடன், 2052 ஆம் ஆண்டில் 60 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகை 24.8% வீதம் வரை அதிகரிக்குமென ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக அலகால் எதிர்வுகூறப்பட்டுள்ளமையால், முதியோர்களின் நலனோம்புகை மற்றும் உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் அவசியமென அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, அரச தேசிய கொள்கை வேலைச்சட்டகமான ''மதிப்புமிகுந்த சிரேஷ்ட பிரஜை, அர்த்தமுள்ள இளைப்பாறிய வாழ்வு'' தொனிப்பொருளுக்கமைய, முதியோருக்கு சமூக ரீதியான, பொருளாதார ரீதியான, உடலியல் மற்றும் ஆன்மீக ரீதியான திருப்திகரமான வாழ்வுக்காக வசதிகளை வழங்குவதற்கு இயலுமாகும் வகையில் ''இலங்கையின் முதியோருக்கான தேசிய கொள்கை'' தயாரிக்கப்பட்டுள்ளது. கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள குறித்த தேசிய கொள்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 06. தனியான கணணி செயலி மூலம் பொதுமக்களுக்கு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமாகும் வகையில் 'அரசாங்க சுப்பர் அப்' செயலியை (Government SuperApp) உருவாக்குதல்

ஒன்றுக்கொன்று வித்தியாசமான முறைமைகள், பல்வித அத்தாட்சிப்படுத்தும் செயன்முறைகள் மற்றும் பல்வேறு அரச திணைக்களங்கள் மூலம் மீண்டும் மீண்டும் தரவுகளை உட்சேர்ப்பதற்குத் தேவையான அரச சேவைகளை வழங்குவதற்காக சமகாலத்தில் ஒன்றுக்கொன்று வித்தியாசமான அணுகுமுறைகளால், பிரஜைகளுக்கு குறிப்பிடத்தக்களவு சிரமங்கள் ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அதன்மூலம் வருடாந்தம் 500 மில்லியன் ரூபாய்களுக்கும்

அதிகமான பொருளாதாரப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றமையும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதனால், இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத் திட்டத்திற்கமைய, பிரஜைகளுக்கு தனியான கணணி செயலியொன்றின் மூலம் அரச சேவைகளை வழங்குவதற்காக, விரிவான விடயங்களை உள்ளடக்கக் கூடிய வகையில் 'அரசாங்க சுப்பர் அப்' செயலியை (Government SuperApp) அபிவிருத்தி செய்வது மூலோபாய முன்னுரிமையாக அடையாளங் காணப்பட்டுள்ளது. அனைத்து அரச சேவைகளையும் பொதுவானதொரு பயனர் நேயம்மிக்க கைத்தொலைபேசி மற்றும் இணைய செயலியாக ஒருங்கிணைத்து, இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்ட 14 மில்லியன் பிரஜைகளுக்கும், மற்றும் வருடாந்தம் 02 மில்லியன்கள் அணுகக்கூடிய உபதிரை மூலம் அரச சேவைகளுக்குத் தடையின்றி அணுகுவதற்கான இயலுமையை வழங்கும் டிஜிட்டல் தளமொன்று இக்கருத்திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 'அரசாங்க சுப்பர் அப்' செயலியை (Government SuperApp) செயலி 02 கருத்திட்டப் படிமுறைகளின் கீழ் 500 மில்லியன் ரூபாய்கள் மொத்தச் செலவில் 2025-2026 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்காக டிஜிட்டல் பொருளாதார அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. பல்கலைக்கழகங்களில் பூர்த்தி செய்யப்படாமலுள்ள கருத்திட்டங்கள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்தல்**

பல்கலைக்கழகங்களுக்குத் தேவையான கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்வதற்காக, உருஹுணு, ரஜரட்டை, சப்பிரகமுவ, வயம்ப, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர போன்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் குறித்த கருத்திட்டக் காலத்தில் எதிர்கொள்ள நேரிட்ட பல்வேறு தடைகளால் முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு இயலாமல் போயுள்ளது. புதிய மாணவர்களை அதிகமாக சேர்த்துக் கொள்வதற்கும், கற்கை வசதிகளை அதிகரிப்பதற்கும், 75% வீதத்திற்கும் அதிகமான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள குறித்த கருத்திட்டங்களின் எஞ்சிய வேலைகள் முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. அதற்கமைய, 2026, 2027 மற்றும் 2028 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியைப் பயன்படுத்தி குறித்த நிர்மாணப் பணிகளை முன்னுரிமை அடிப்படையில் முழுமையாகப் பூர்த்தி செய்வதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. ''அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை'' நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள உப கருத்திட்டங்களின் வேலைகளைப் பூர்த்தி செய்தல்**

2016 – 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ''அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை'' எனும் பெயரில் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டாகும் போது, குறித்த கருத்திட்டங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள உப கருத்திட்டங்களிடையே 29 கருத்திட்டங்கள் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழும், 03 கருத்திட்டங்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழும் மேலும் பூர்த்தி செய்வதற்கு எஞ்சியுள்ளது. இடைநிறுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களால் பாடசாலைச் சமூகம் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளதுடன், குறித்த பணிகளுக்காக செலவிட்ட நிதியும் பயனற்ற செலவாக மாறியுள்ளது. அதற்கமைய, ''அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை'' கருத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு எஞ்சியுள்ள கருத்திட்டங்களின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. எம்பிலிப்பிட்டி – பனாமுற – புளுதொட்ட (B115) வீதியைப் புனரமைப்பு செய்தல்**

காலி – தெனியாய – மாதம்பே வீதியின் இறக்குவான – சூரியகந்த வீதியை புனரமைப்புச் செய்வதற்காக சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்திடமிருந்து 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை அரசாங்கம் கடனாகப் பெற்றுக் கொண்டுள்ளது. குறித்த கடன் தொகையில் 1,000 மில்லியன் ரூபாய்கள் எஞ்சியுள்ளதுடன், குறித்த கடன்தொகையைப் பயன்படுத்தி, தற்போது பழுதடைந்த நிலையிலுள்ள எம்பிலிப்பிட்டி – பனாமுற – புளுதொட்ட (B115) வீதியின் கொலன்ன தொடக்கம் சூரியகந்த வரையான 9.62 கிலோமீற்றர் வரையான வீதியைப் புனரமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த வீதியின் ஊடாக சிங்கராஜ வனம், மடுவன்வெல வலவ்வ, வவுல்பனே, கொன்கல, ஹந்தபானாகல, புளுதொட்ட நீர்வீழ்ச்சி மற்றும் ஹிமிதிரி பிரதேசம் போன்ற சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இடங்களுக்கு அணுகுவதற்கு இயலுமாவதுடன், அதன்மூலம் சுற்றுலாத்துறையும் ஊக்குவிக்கப்படும். அதற்கமைய, எம்பிலிப்பிட்டி – பனாமுற – புளுதொட்ட வீதியின் ஒருபகுதியை புனரமைப்பதற்காக இறக்குவான – சூரியகந்த வீதிக் கருத்திட்டத்தில் எஞ்சியுள்ள கடன்தொகையைப் பயன்படுத்துவதற்கும், ஏனைய நிதித் தேவைகளை இலங்கை அரசின் நிதியொதுக்கீட்டின் மூலம் பூர்த்தி செய்வதற்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவ தொடக்கம் தொடங்கொட வரையான வீதியைப் புனரமைப்புச் செய்தல்**

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவ தொடக்கம் தொடங்கொட வரையான வீதி 2011 ஆம் ஆண்டில் மோட்டார் வாகனப் போக்குவரத்திற்காக திறக்கப்பட்டுள்ளதுடன், இதுவரைக்கும் எவ்வித பிரதான புனரமைப்புக்களும் மேற்கொள்ளப்படவில்லை. தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் 0 கிலோமீற்றர் தொடக்கம் 19 கிலோமீற்றர் வரையான அதிவேக நெடுஞ்சாலையின் பகுதி மற்றும், 19 கிலோமீற்றர் தொடக்கம் 34 கிலோமீற்றர் வரையான அதிவேக நெடுஞ்சாலைப் பகுதி, பக்கேஜ் இரண்டின் (02) கீழ் துரிதமாகப் புனரமைக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, 19 கிலோமீற்றர்கள் 04 பாதைகளுடன் கூடிய அதிவேக நெடுஞ்சாலை வீதியை உள்ளடக்கியதாக 0 கிலோமீற்றர் தொடக்கம் 19 கிலோமீற்றர் வரை பழுதடைந்துள்ள அதிவேக நெடுஞ்சாலையின் பகுதியை இரண்டாம் பக்கேஜ் இன்கீழ் புனரமைப்புச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக, உள்நாட்டு ஒப்பந்தக்காரர்களிடம் தேசிய போட்டி விலைமுறிக் கோரல் முறைமையின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக 05 விலைமுறிகள் சமர்ப்பிக்கபட்டுள்ளன. விலைமுறிகள் மதிப்பீட்டுக்குழு மற்றும் உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் குறித்த ஒப்பந்தத்தை 1,490.96 மில்லியன் ரூபாய்களுக்கு கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான M/s Access – WKK குழுமத்திற்கு வழங்குவதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. பரந்தன் கோஸ்ரிக் சோடா/குளோரின் திட்டத்திற்கு ஆர்வங் காட்டுகின்ற முதலீட்டாளர்களிடம் விருப்பக் கோரல்களைப் பெற்றுக்கொள்ளல்**

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை அமைந்துள்ள வளாகத்தில் கோஸ்ரிக் சோடா/குளோரின் உற்பத்தித் தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியவளக் கற்கையை வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனியால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், தொடர்ந்துவரும் காலங்களில் தொழிற்சாலையை குறித்த இடத்திலேயே அமைப்பதற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது பரந்தன் இரசயானக் கம்பனி குளோரின் இறக்குமதி செய்து நாடு முழுவதும் விநியோகித்து வருகின்றதுடன், நாட்டின் நீர் சுத்திகரிப்புக்கான ஒட்டுமொத்த குளோரின் இறக்குமதி செய்யப்படுவதால்,

உலகளாவிய விநியோகச் சங்கிலியில் தடைகள் ஏற்படும் போது, நீர் சுத்திகரிப்புக் கட்டமைப்பு முழுமையாக நிறுத்தப்பட வேண்டிய இடர்கள் காணப்படுகின்றன. அத்துடன், குளோரின் இறக்குமதிக்காக செலவாகும் வெளிநாட்டு செலாவணியைக் குறைத்துக் கொண்டு, நீர்ப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு குளோரின் உற்பத்தித் தொழிற்சாலையை உள்நாட்டிலேயே நிர்மாணிப்பது தேசிய ரீதியில் முக்கியம் வாய்ந்த பணியாக அடையாளங் காணப்பட்டுள்ளது. அத்துடன், உத்தேச கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், 95 நேரடி வேலைவாய்ப்புக்களும் அண்ணளவாக 2,000 மறைமுக வேலைவாய்ப்புக்களும் உருவாகுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனி அமைந்துள்ள காணியில் குறித்த கம்பனிக்கு ஒதுக்கப்பட்டுள்ள 30 ஏக்கர் காணியில் உத்தேச கருத்திட்டத்தை அரச – தனியார் பங்குடமைக் கருத்திட்டமாக மேற்கொள்வதற்காக ஆர்வங் காட்டுகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் விருப்பக் கோரல்களைப் பெற்றுக் கொள்வதற்காக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

12. **எப்பாவெல, கிரிபாவ, இராஜாங்கனை மற்றும் நொச்சியாகம ஒருங்கிணைந்த நீர் விநியோகத் திட்டத்தின் I ஆம் கட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

அநுராதபுர மாவட்டம் மற்றும் குருநாகல் மாவட்டத்தின் எல்லைப் பிரதேசங்களில் அதிகரித்துவரும் நாட்பட்ட சிறுநீரக நோய்க்குத் தீர்வாக எப்பாவெல, கிரிபாவ, இராஜாங்கனை மற்றும் நொச்சியாகம ஒருங்கிணைந்த நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்தின் கீழ் 09 பிரதேச செயலகப் பிரிவுகளில் 134 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கியவாறு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், பாதிப்புக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவுகின்ற சுகாதார இடர்கள் மற்றும் பாதுகாப்பான குடிநீர் இன்மையைக் கருத்தில் கொண்டு, எப்பாவெல, கிரிபாவ, இராஜாங்கன மற்றும் நொச்சியாகம ஒருங்கிணைந்த நீர் விநியோகத் திட்டம் - I ஆம் கட்டம் என மீள்கட்டமைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, எப்பாவெல, கிரிபாவ, இராஜாங்கனை மற்றும் நொச்சியாகம ஒருங்கிணைந்த நீர் விநியோகத் திட்டத்தின் I ஆம் கட்டத்தை, 2026-2029 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

13. **பயி∴பேசிக் அயிசோ∴பேன் இன்சுலின் ஊசிமருந்து (மனித) 30% திரவ 70% அயிசோ∴பேன் குப்பிகள் 2,200,000 இனை விநியோகிப்பதற்கான பெறுகை**

நீரிழிவு நோயாளர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மருந்தான பயி∴பேசிக் அயிசோ∴பேன் இன்சுலின் ஊசிமருந்து (மனித) 30% திரவ 70% அயிசோ∴பேன் குப்பிகள் 2,200,000 இற்கான பெறுகைக்கு சர்வதேச போட்டி விலைமுறிகள் கோரப்பட்டுள்ளன. அதற்காக இரண்டு விலைமுறிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதற்கமைய, உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைக்கமைய பயி∴பேசிக் அயிசோ∴பேன் இன்சுலின் ஊசிமருந்து (மனித) 30% திரவ 70% அயிசோ∴பேன் குப்பிகள் 2,200,000 இனை விநியோகிப்பதற்கான ஒப்பந்தத்தை, கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான இந்தியாவின் M/s M/J Biopharma Pvt. Ltd இற்கு 3.98 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு வழங்குவதற்காக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. நிறுவனப் பாதுகாப்பில் அல்லது பொறுப்பிலுள்ள சிறுவர்கள் மற்றும் வீதியோரச் சிறுவர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு வழங்கும் வேலைத்திட்டம்**

நிறுவனப் பாதுகாப்பில் அல்லது பொறுப்பிலுள்ள சிறுவர்கள் மற்றும் வீதியோரச் சிறுவர்களுக்கு மாதாந்தம் 5,000/- ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2025.06.16 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 'அர்த்தம்' எனப் பெயரிடப்பட்டுள்ள குறித்த வேலைத்திட்டத்தின் கொடுப்பனவுகள் 2025 யூலை மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 'அர்த்தம்' வேலைத்திட்டத்திற்கு 2025 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள 1,000 மில்லியன் ரூபாய்களை பிள்ளைகளின் உயரிய நலனுக்காகப் பயன்படுத்தக் கூடிய வகையில் 2025 ஜனவரி மாதம் தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் குறித்த கொடுப்பனவுகளை வழங்குவதற்கு இயலுமை இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, 'அர்த்தம்' வேலைத்திட்டத்தின் கொடுப்பனவுகளுக்கான உரித்து ஆரம்பிக்கின்ற திகதி 2025.01.01 எனக் கருத்தில் கொள்வதற்கும், அன்று தொடக்கம் உரித்தான நிலுவையைச் பயன்பெறும் பிள்ளைகளின் கணக்கில் வைப்பிலிடுவதற்கும், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**15. புதிய நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டமூலம்**

இலங்கையில் நுண்நிதித் தொழிற்றுறைக்கு விரிவான ஒழுங்குபடுத்தல் சட்டகமொன்றை உருவாக்குவதற்காக 2016 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நுண்நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் போதுமானமாக இன்மையால், புதிய நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக, இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலம் அரச வர்த்தமானியில் வெளியிட்ட பின்னர், குறித்த சட்டமூலத்திற்கு எதிராக பல்வேறு தரப்பினர்களால் உயர்நீதிமன்றில் 07 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. குறித்த மனுக்கள் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் பாராளுமன்றத்தின் 'பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களை சீர்செய்வதற்கான துறைசார் மேற்பார்வை செயற்குழுவால்' வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கருத்தில் கொண்டு, புதிய சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சும், மத்திய வங்கியும் கவனம் செலுத்தியுள்ளன. அதற்கமைய, புதிய நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக 2025.08.11 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள புதிய சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த புதிய நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**